[7th March 1968

THIRU A. R. DAMODARAN: How is it possible for the Government to start sanatoria without investigating the possibilities of water-supply in the area concerned ?

THE HON. THIRU S. J. SADIQ PASHA: It has now been made up.

MR. CHAIRMAN: It is a case of sudden disappointment.

Cycle and bullock cart taxes

*208 Q.—THIRU N.R.THIAGARAJAN: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether the taxation of cycles and carts was cancelled in Virudhunagar Municipality; and

(b) the loss incurred by the Municipality thereby ?

சைக்கிள், மாட்டுவண்டி வரிகள்

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) விருதுநகர் நகர சபையில் சைகிள் வரி, மாட்டு வண்டி வரி ரத்து செய்யப்பட்டதா ?

(இ) இதன் மூலம் நகரசபைக்கு எவ்வளவு நஷ்டம் ஏற்படும் ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

திரு. என். ஆர். தியாகராஜன்: தலைவரவர்களே, விருதுநகரில் அந்த முனிசிபாலிடியில் இத்தகைய தீர்மானம் ஒன்று நிறைவேற்றியதாக அந்த முனிசிபல் கவுன்சிலரே என்னிடம் கூறினார். சர்க்கார் அனுமதி கொடுத்தால் சைக்கிள், வண்டிகளுக்கு வரி வசூலிக்க மாட்டோம். சர்க்காரிடம் அனுமதி வாங்கிக் கொடுக்க மாட்டீர்களா என்று கேட்டார். தீர்மானம் இதுவரை நிறைவேற்றியிருக்காவிட்டாலும், இனிமேல் நிறைவேற்றி அனுப்பினால் அரசாங்கம் பரிசீலிக்குமா ? அனுமதி கொடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: இது போன்ற வரிகளை வசூலிக்க வேண்டுமென்று மிகமிக முந்திய காலத்தில் நிர்ணயிக்கப்பட்டது. அவருக்கு மிக நெருங்கிய அரசாங்கத்திடமே இதைக் கேட்டு தள்ளுபடி செய்திருக்கக் கூடும். ஆனால் தள்ளாமல் இருக்கக் காரணம் இதைத் தள்ளிவிட்டால் நகராட்சி மன்றம் நல்ல முறையில் இயங்க முடியாது என்பதனால் தான் அவர்களே தள்ளாமல் இருந்திருக்கிறார்கள். இந்த அரசாங்கம் அதைத் தள்ளுகிற உத்தேசமில்லை.

Collection of Panchayat Tax in Cheevalapperi Village.

*209 Q.—THIRU N. R. THIAGARAJAN: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether Panchayat tax is collected now in lumpsum which was not collected for the past 10 years at Cheevalapperi of Tirunelveli District; and

(b) whether the Act admits collection of arrears of tax due for over three years ?